முருகப்பெருமான் துணை

**மகான் குகைநமச்சிவாயர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.05.2023**, புதன்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கா
தன்னார்வத் தொண்டு நிறுவிட
அவதாரம் புரிந்த ஞானதேசிகா
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது விடை திங்கள்
குறைவிலா மூவைியீர் திகதி புந்திவாரம்
அறிவுரை ஆசி நூல் தன்னை
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 17 ம் நாள், **31.05.2023**, புதன்கிழமை)
ஆற்றல்பட குகைநமச்சிவாயர் தானும்
3. தானுமே உலகநலமுற உரைப்பேன்
தரணி நல்லாட்சி பெறவேணுமாயின்
ஞானவான்கள் ஆளுமையாக
நாடெங்கும் பரவ வேண்டும்
4. வேண்டியே இந்த மாற்றம் நடத்த
வேலவனாக அரங்கனாக வந்து
தொண்டர்படைதனை உருவாக்கி
தெய்வ நெறிதனை தந்து வர
5. வருகவே வையகம் எங்கிலும்
வள்ளல் நெறி ஏற்கப்பட்டு
முருகப் பெருமான் ஞானவழியே
முழுமை தருமென ஏற்றுவர வேண்டும்
6. வேண்டி மக்கள் தொடர்ந்துவர
விடாது அரங்கன் குடிலில்
தொண்டு செய்து கொண்டு
தொடர்ந்து அரங்கன் ஆசி ஏற்று
7. ஏற்று தீட்சை பலமாக
எந்நாளும் செபதபம் செய்து
மாற்றம் தரும் அன்னதான
மகத்துவம் அறிந்து கையில் எடுக்க

8. எடுக்கவே தொடர் சேவையாக
எங்கும் தருமம் வளர்க்க
கெடுதியான செயல் களெல்லாம்
குவலயம் விட்டு தானாய் அகலும்

9. அகலவே தரும ஞானவான்கள்
ஆறுமுகனார் வழிபாட்டாலே
அகிலமெங்கிலும் நிரம்பி இனிதே
ஆளுமையை முடிவு செய்யும் சக்திகளாக

10. சக்திகளாக உருவெடுத்து நன்கு
சாற்றிடுவேன் உலகைமாற்றும்
சத்திமிகு ஞான ஆட்சி படைப்பர்
சகலருக்கும் ஞானம் அருளி

11. அருளியே உலகம் ஞானலோகமாகும்
ஆறுமுகன் ஆளுமை கொண்ட
அருள்மிக்க பாதுகாப்புமிக்க உலகாகும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—